ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1786/26 - 2012 නොවැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2012.11.30

*1786/26 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ.2/1999.*

**1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் கடற்றொழில், மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

(வைத்திய கலாநிதி) ராஜித சேனாரத்ன,
கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சு,
கொழும்பு,
2012, நவெம்பர் 16.

ஒழுங்குவிதிகள்

2011, நவெம்பர் 30 ஆந் திகதிய 1734/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்கம் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம்:-

"6. ஆளெவரும் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரியால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றில்லாமல் இலங்கையினுள் உயிர் கற்பாறை எதனையும் ஏற்றிச் செல்லுதலாகாது.";

(2) ஆறாம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன்மூலம்:-

"6அ. ஆறாம் ஒழுங்குவிதியின் கீழ் உரிமம் ஒன்றிற்கான விண்ணப்பமொன்று பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

6ஆ. ஆறாம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம் –

(i) கைமாற்றப்படுதலாகாது :

(ii) பொருளளவில் இதற்கான அட்டவணை ii இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்பட்டவாறான நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும் . ” ;

(3) இதற்கான அட்டவணை I ஐ நீக்கம் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம்:-

**அட்டவணை I**

(ஒழுங்குவிதி 6அ)

**இலங்கையினுள் உயிர் கற்பாறையை ஏற்றிச் செல்வதற்கான உரிமம் ஒன்றிற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :..........................................................................................................................

2. முகவரி : ..........................................................................................................................................................

3. போக்குவரத்து (இடத்தைக் குறித்துரைக்கவும்) : ..................................................... இருந்து ............................................ வரை

4. வாகன இல. : ...................................................................................................................................................

5. விண்ணப்பிக்கும் காலப்பகுதி :...........................................................................இலிருந்து ........................................ வரை செல்லுபடியாகும் காலப்பகுதிக்கமைய.

6. இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தொடரிலக்கம் } ...................................................................................

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுத்துதவப்பட்ட விவரங்கள் உண்மையானவையும் சரியானவையுமாகும் என இத்தால் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதன்கண்ணுள்ள எவையேனும் விவரங்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் எனது/எமது விண்ணப்பம் மறுக்கப்படுவதுடன் உரிமம் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பின் இல்லாதொழிக்கவும்படும் என்பதனை நான்/ நாம் அறிவேன்/அறிவோம்.

.............................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :...................

**அட்டவணை II**

(ஒழுங்குவிதி 6ஆ)

உரிமத்தின் படிவம்

**இலங்கையினுள் உயிர் கற்பாறையை ஏற்றிச் செல்வதற்கான உரிமம்**

உரிமத்தின் இல :........................................................................

1. ...........................................................................................என்னும் முகவரியைச் சேர்ந்த ............................................... (விண்ணப்பகாரரின் /நிறுவனத்தின் பெயர்) இலங்கையினுள் உயிர் கற்பாறையை ஏற்றுமதிக்காக ஏற்றிச் செல்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

2. இந்த உரிமம் முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலன்றி அல்லது இடைநிறுத்தப்பட்டாலன்றி ..........................................முதல் ........................ வரை செல்லுபடியாதல் வேண்டும்.

3. போக்குவரத்து (இடத்தைக் குறிப்பிடவும்) :

........................................................................... இலிருந்து ................................................................ வரை

4. வாகன இல: ..........................................................

5. இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தொடரிலக்கம் } ..........................................................

6. இந்த உரிமம் பின்வரும் நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(i) உரிமம் இதன்கண் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளினால் அல்லது நிறுவனத்தினால் மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். கைமாற்றப்படுதலாகாது.

(ii) உரிமம் 2011, நவம்பர் 30 ஆந் திகதிய 1734/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதிக்கான உயிர் கற்பாறைப் பண்பாட்டு ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்ட புடைப்புருவில் செதுக்கப்பட்ட தொடரிலக்கத்துடனான உயிர் கற்பாறை தொடர்பில் மட்டுமே செல்லுபடியாதல் வேண்டும்.

..............................................
பணிப்பாளர் தலைமையதிபதி.

திகதி :...............................

(4) இந்த ஒழுங்குவிதிகள் 2011, நவெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து பயனுறுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

12- 393

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.